Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 220 / 2017

**DEPOSITION OF COMPLAINANT SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | பாவேந்தன் | Calling: | அரிசி வியாபாரம் |
| Father's Name: | அப்பாகுட்டி | Religion: | |
| Village: | காதர்பேட்டை | Age: | 44 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 12.12.2024

(எதிரி ஆஜர்.)

பு.சா.1 குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கிற்காக தாக்கல் செய்துள்ள புகாரிலும், முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் நான் என்ன வேலை செய்கிறேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் அரிசி வியாபாரம் செய்கிறேன் என குறிப்பிட்டுள்ளேன். புகாரிலும், முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் எதிரியை எவ்வாறு எனக்கு தெரியும் என்பதை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரையிலான வியாபாரத்திற்காக எதிரி பணம் கொடுக்க வேண்டும் என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் 2012ம் வருடத்திலிருந்து 2014 வரையிலான காலத்தில் பணம் கொடுக்க வேண்டும். நான் எந்த வகையான அரிசி வியாபாரம் செய்கிறேன் என்றால் அரிசி மொத்த விற்பனை மண்டி வைத்துள்ளேன். 28.05.2012ம் தேதி வரை ரூ.55,00,000ற்கு எதிரி என்னிடம் 5 மாதத்தில் அவ்வளவு தொகைக்கு வியாபாரம் செய்தாரா என்றால் செய்தார், செய்துவிட்டு அதற்காக காசோலை கொடுத்தார். எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றால் 16.10.2014ம் தேதி கொடுத்தார்.

ரூ.10,00,000ற்கு மேல் வியாபாரம் செய்தால் அதை வர்த்தகமாகத்தான் செய்ய வேண்டும் என்றாலும், ஆனால் நான் அரசாங்கத்தை ஏமாற்றுவதற்காக மண்டி தொழிலாக செய்து வருகிறேன் என்றாலும், வரி ஏய்ப்பு செய்வதற்காக அவ்வாறு செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு அரிசியை கொடுத்ததற்காக எனது மண்டியில் கொடுக்கப்பட்ட ரசீதுகளையும், அதன் கார்பன் நகல்களையும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ரூ.55,00,000/- என்பது ஒரே நேரத்தில் செய்யப்பட்ட வியாபாரமா அல்லது அவ்வப்போது செய்யப்பட்ட துண்டு வியாபாரத்தின் மொத்த தொகையா என்றால் ஒரு மாதத்தில் அவருக்கு கொடுத்த அரிசிக்குண்டான தொகை தான் ரூ.55,00,000/-. ஏற்கனவே கொடுத்த அரிசிக்குண்டான பணம் பெறாமலேயே தொடர்ச்சியாக எதிரிக்கு எவ்வாறு அரிசி வழங்கி வந்தேன் என்றால் அவர் காசோலையை கொடுத்ததால் தொடர்ந்து கொடுத்து வந்தேன்.

காசோலையை ஒரே நாளில் கொடுத்தாரா அல்லது நான் மேலே கூறியவாறு வெவ்வேறு நாள்களில் கொடுத்தாரா என்றால் ஒரே நாளில் தான் கொடுத்தார். எதிரி காசோலை கொடுத்ததற்கு பின்பு 04.09.2014ல் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன கூறியிருந்தார் என்றால் அதில் என்ன கூறியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது, எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். அந்த அறிவிப்பில் எதரி அவரது துர்கா டிரேடர்ஸை கலைத்து விட்டதாகவும், அதனால் அவர் எனக்கு அளித்த காசோலைகளை திரும்ப அவரிடமே கொடுத்து விட வேண்டும் என்று சொல்லியும் அறிவிப்பை அனுப்பியிருந்தார் என்றாலும், அதனால் தான்என்னிடமிருந்த எதிரியின் காசோலைகளை நானே நிரப்பி வசூலுக்கு செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

எதிரியுடன் நான் ஏற்கனவே வியாபாரம் செய்து வந்ததால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் அதே போன்று அவருடைய கையொப்பத்தை காசோலைகளில் இட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல, எதிரி தான் என் எதிரில் காசோலைகளில் கையொப்பம் இட்டு கொடுத்தார். காசோலைக்கான வங்கி கணக்க எதிரியின் தனிப்பட்ட வங்கிக்கணக்கா அல்லது துர்கா டிரேடர்ஸ்ன் வங்கிக்கணக்கா என்றால் துர்கா டிரேடர்ஸ்ன் வங்கிக்கணக்கு. 03ஆம் மாதத்தில் 2014ம் வருடம் துர்கா டிரேடர்ஸ் கலைக்கப்பட்டததால் தான் காசோலை திருப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி எனக்கு ரூ.86,00,000/- கொடுக்க வேண்டும் என்றால் ஒரே காசோலையாக

கொடுத்திருப்பார், இவ்வாறு தனித்தனி காசோலைகளாக கொடுத்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல, அவ்வாறு அவர் தான் கொடுத்தார். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிரி தனியாக ரூ.4,00,000/- எனக்கு கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன், அது என்ன பணம் என்றால் எதிரி என்னிடம் கைமாற்று கடனாக வாங்கியிருந்தார்.

அவ்வாறு எதிரி என்னிடம் பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி மீது தொடர்ந்துள்ள அனைத்து வழக்கிலும் எதிரி ரூ.86,00,000/- தரவேண்டும் என கூறிவிட்டு ஒவ்வொரு வழக்கிலும் ரூ.5,00,000/-ற்கு தனித்தனியாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் 2014ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி விட்டு 2017ல் வழக்கு தாக்கல் செய்துவிட்டு எதிரி ஊரிலேயே இல்லை, நிறுவனமும் கலைக்கப்பட்டுவிட்டது, பணம் பறிக்கும் நோக்கத்தோடு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எதிரி வியாபாரத்தை நிறுத்திவிட்டதாக கூறுவது தவறு, அதன்பிறகும் எதிரி அரிசி வியாபாரம் செய்து அதற்காக காசோலை கொடுத்து ஏமாற்றியிருக்கிறார், அதற்கான ஆவணமும் என்னிடம் உள்ளது. எதிரி எனக்கு சட்டப்படி எந்த பணத்தொகையும் கொடுக்கவேண்டியதில்லை என்றாலும், நான் எதிரி கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) பாவேந்தன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.